# விடுதலைப்போரில் கலைஞர்களின்பங்குமகத்தானது

விலை ரூபா 5-00


# ஈழநாடு


THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 10 இதழ் 97

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23 — 05 1993


## தலைவர் பிரபா



(யாழ்ப்பாணம்)

உலக வரலாற்றின் ஒருபுதிய அத்தியாயமாக இங்கு எமது தாயக மண்ணில் ஒரு புரட்சிகர வரலாறு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றின் கதாநாயகர்களவிபலர் அவர்களது தனிமனித சாத்திரங்களின் தொகுப்பாகவே எமது வரலாற்றுக் காவியம் படைக்கப்படுகிறது.

இவ்வாறு முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக்கழகம் உருவாக்கிய 'இது எங்கள் தேசம்' வீடியோ ஒளிப்பட நாடா வெளியீட்டுவிழாவையொட்டி நேற்று தமிழீழ தேசிய தலைவர் திரு. வே. பிரபாகரன் விடுத்த அறிக்கையை குறிப்பிடுகிறார். அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

எமது தேசத்தின் இலட்சிய வரலாற்றில் அன்னை பூபதி ஒரு உன்னத இடத்தை வகிக்கிறார். அந்த அன்னையின் தனித்துவமான சரித்திரத்தை அற்புதமான கலை வடிவமாக தந்துள்ள முல்லை மாவட்டக் கலைஞர்களை நான் மெச்சுகிறேன். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியப் படைப்பாளி

(4-ம் பக்கம் பார்க்க)

## ● வடக்கு-கிழக்கில்

# விடுதலைப் புலிகளுக்கு எதிராக

# தீவிர இராணுவ நடவடிக்கை

### பாதுகாப்பு வட்டாரம் கூறுகிறது

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டவாறு வடக்கு-கிழக்கில் தீவிரமாக முன்னெடுக்கப்படுமெனவும் அதில் எந்தவித மாற்றமும் இல்லையெனவும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

அவ்வட்டாரங்கள் மேலும் கூறுகையில்: புலிகளின் பிடியில் இருக்கும் பகுதிகளை மீட்டெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளில் எந்தவிதமாற்றமும் இருக்காது. அவை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

பாதுகாப்பு படையினரின் தலைமை புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஒருமித்த கருத்தோடு செயற்பட்டுவருகிறது. கிழக்கில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எதிர்பார்த்த பலனை தந்துள்ளது. வடக்கே இராணுவத்தினரால் பிடிக்கப்பட்ட பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்று வருகிறது.

இதேவேளை புலிகளின் பிடியிலுள்ள பகுதிகளை மீட்கும் நடவடிக்கைகளும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளன. (சி)

இது எங்கள் தேசம்

## ஒளிப்பதிவு நாடா வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பாக முல்லை மாவட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்ட 'இது எங்கள் தேசம் வீடியோ ஒளிப்பட நாடா' தமிழீழ அரசியல்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசை கலைப்பதற்கு மத்திய அரசு தருணம் பார்க்கிறது

(சென்னை)

தமிழக அரசு கலைக்கப்படும் காலம் நெருங்கிவிட்டதாக அவதானிகள் தெரிவித்திருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில்சட்டம்ஒழுங்கு நிலைமோசமடைந்துவருவதாகவும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கை தீவிரமடைந்துவருவதாகவும் ஊழல் மலிந்துவிட்டதுடன் தமிழக அரசின் ஏதேச்சதிகாரம் பலமடங்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஹேமா அரசியலுக்கு வர பலத்த எதிர்ப்பு

(கொழும்பு)

திருமதி ஹேமா பிரேமதாச அரசியலுக்குள் நுழைவதற்கு ஐக்கியதேசியக் கட்சியின் ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்து வருவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

திருமதி ஹேமாவை அரசியலுக்குள் பிரவேசிக்க வைக்க சில ஐக்கியதேசியக் கட்சி அமைச்சர்கள் முயற்சிப்பதாகவும் எனினும் இதற்கு பலத்த எதிர்ப்பு உள்ளதாகவும் அச்செய்தி தெரிவிக்கின்

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு தலைவர் ஜனாதிபதியை சந்திப்பார்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்க அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை தீர்வுகுறித்து தெரிவுக்குழுவின் அடுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிகடலில் பாரிய கப்பல்

(தாளையடி)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவமுகாமை அண்டிய கடற்பரப்பில் நேற்றுப் பகல், இரவு வேளைகளில் கடற்படையினரின் பாரிய கப்பல் ஒன்று நங்கூரம் இட்டு இருந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு பிரச்னைக்கே முதலில்பதிலளிக்கவேண்டும்

### - சந்திரிகா கூறுகிறார் -

(கொழும்பு)

மாகாணசபைக்கான அதிகாரத்தை நடைமுறைப்படுத்த இருக்கும் இவ்வேளையில் முதலில் நாம் வடக்கு-கிழக்கு பிரச்னைக்கே பதிலளிக்கவேண்டியவர்களாக உள்ளோம் என மேல்மாகாண புதிய முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கூறியுள்ளார்.

அவர் மேலும்கூறுயதாவது: இந்தப் பிரதேசங்களில் அதிகாரத்தை நடாத்துவதற்கு மாகாணசபை ஏற்றது. கடந்த 5வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபைகளை முறைப்படி ஒழுங்காக நடத்தவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய இடைத்தேர்தல்; காங்கிரஸ் தோல்வி

(புதுடில்லி)

இந்தியாவில் நடந்த புதன்கிழமை நடைபெற்ற இடைத்தேர்தல்களின் முடிவுகள் நேற்று வெளியாகின இத்தேர்தலில் காங்கிரஸிற்கு பலத்த தோல்வி கிடைத்துள்ளது. இதேவேளை பாரதீய ஜனதா கட்சிக்கு வெற்றிகிடைத்துள்ளது.

குஜராத்தில் 6 இடங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமது கோரிக்கையை நேரடியாக கூறவேண்டும்

### புரண்ட்லைனுக்கு ஜனாதிபதி பேட்டி -

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து விடுதலை புலிகள் தங்கள் கோரிக்கைகளை நேரடியாக முன்வைக்க வேண்டுமென ஜனாதிபதி டி. பி விஜயதுங்க இந்தியாவின் பிரபல சஞ்சிகையான 'புரண்ட்லைனுக்கு' அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்: இனப்பிரச்னை தீர்வு குறித்து தூதுவர்கள் மூலம் அரசுக்கு அறிப

(4-ம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் நியமனம் ஐ. தே. க. சூழ்ச்சி

(கொழும்பு)

தென்மாகாணம், வடமத்திய மாகாணத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி முதலமைச்சர்களை நியமித்திருப்பது ஒரு சூழ்ச்சியாகும் என்று 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதன்பிரகாரம் ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்க திருத்தம் கொண்டுவருகிற நோக்கில் மாகாணசபையை அர

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

ரமணிச்சந்திரன் நாவல்கள், கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' (10 பாகம்), பிறந்தநாள் வாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (ஏ 3148)

### சோதிடம்

எண்சோதிடம், கிரகநிலை, ஆத்மஞானம் போன்ற பல விபரங்களோடு கூடிய கைரேகை சாஸ்திரம் பார்க்குமிடம் வல்லிபுரக்கோவில்வீதி பார்ப்பவர், கைரேகை ஞானி S. நித்தியானந்தம். (ஐ-130)

### வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து - மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து 100 யார்) (கி-133)

### வேப்பெண்ணை

வேம்பு தரும் வேப்பெண்ணைக் கிருமி நாசினி. உங்கள் தோட்டப்பயிர்களையும், எலுமிச்சை, தோடை, பலா, மா இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்தவல்லது. 100 வீதம் சுத்தமான இதனை மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன்பெறுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டு சந்தையிலிருந்து 100 யார்) (கி-132)

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsule கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-111)

### A/L பௌதிகவியல் 94/95

தனிப்பட்ட பிரத்தியேக முறையில் பௌதிகவியல் தூய கணிதம் பிரயோககணிதம். பல ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் மிகச் சிறப்பாக கற்பிக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. R. பாலசுப்பிரமணியம் B sc (cey.) [Dip-in Ed] 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-135)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வர். சலைவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம்121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (கி-113)

### தேவை

1. 500 (w) ஜெனரேட்டர் 2. 23 கேச் டைனமோவுக்கான கம்பி இப்பொருட்கள் தேவைப்படுவதால் விற்பனை செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்க்கப்படும். விளம்பர இல. 137 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-137)

---

# தேவை

1. அச்சுக்கோர்ப்பாளர் (Compositors)

2. ஒப்பு நோக்குநர் (Proof Readers)

இவ்விரு துறையிலும் பயிற்சி உடையவர்கள் தமது அனுபவச் சான்றிதழ்களுடன் (24-05-93) திங்கட்கிழமை நேரில் சமூகம் தரும்படி கோரப்படுகிறது.

தொடர்பு: மாறன் பதிப்பகம்
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

(கி-136)

---

யாழ்ப்பாண மக்களின் நற்பெயர் பெற்ற ஸ்தாபனம் >

# ERIC GANESH
# எரிக் கணேஷ்

(கண்ணாடி பொருத்துநர்)

உங்கள் தேவைகளுக்கேற்ப கண்ணாடிகளை இறக்குமதி செய்யப்பட்ட பிறேம்களில் தெரிவுக்கேற்றவாறு பொருத்திக்கொடுக்கும் ஒரே நிறுவனம்

556, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

(ஏ-3154)

---

## இராசி பலன்

23-05-1993
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு வைகாசி 10)

துதியை மு. இ 7 49 வரை மிருகசீரிடம் பி இ 3 01 வரை இராகுகாலம்மாலை 4 22 முதல் 5.52 வரை, சுபநேரம் காலை 8 52 முதல் 10 22 வரை சித்த யோகம்.

மேடம்: தேக சௌக்கியம், பிறர்புகழாரம், சுப போஜனம்.

இடபம்: மன சங்கடம், தேடிவந்த உறவு, கற்பனை மிகுதி.

மிதுனம்: தொழில்லாபம், தற்பெருமை, காரியபலிதம்.

கடகம்: தொழில் மந்தம், மனவிரக்தி, அவசர செலவு

சிங்கம்: வீட்டில்சுபநிகழ்ச்சி, வருமான பெருக்கம், மகிழ்ச்சி

கன்னி: பெரியோர் மரியாதை, மகிழ்ச்சியான சந்திப்பு, புகழ்.

துலாம்: நிர்ப்பந்தம், கடு மாற்றம், குடும்ப வேதனை.

விருச்சிகம்: மனக்கலக்கம், நாணயம் தவறுதல், அகால உணவு

தனுசு: இனசன வருகை, எதிர்பார்த்த உதவி தியாக சிந்தை

மகரம்: தொழில் சிறப்பு, பணவரவு, தாயாரின் பாசம்

கும்பம்: அஜீரணக்குறைவு, தொழில் குழப்பம், தடுமாற்றம்.

மீனம்; புதிர மாற்றம், குடும்பகஸ்டம், விரக்தி.

ஜோஸ்யர்

---

## அரச உத்தியோகத்தர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

உதவி அரசாங்க அதிபர்கள் / அல்லது அவர்களின் நிர்வாக உத்தியோகத்தர்கள், மாவட்டத் திட்டப் பணிப்பாளர், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர், சமநல சேவை உதவி ஆணையாளர் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள்), பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சிறுகைத்தொழில் பணிப்பாளர் (கச்சேரி), விவசாயத்திணைக்கள உதவிப் பணிப்பாளர், கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர், மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர், வீதி அதிகார அமைப்புப் பொறியியலாளர் ஆகியோரை நாளை 24-ம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு யாழ். செயலகத்தில் சமூகமளிக்கும்வண்ணம் யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (இ)

## இன்று

(கொழும்புத்துறை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக்கிளையின் விசேட கூட்டம் இன்று 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு கொழும்புத்துறை வீதியில் உள்ள இயக்கப்பணிமனையில் தலைவர் திரு ஆ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (154)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

---

## பிலிப்ஸ் ஞாபகார்த்த வைத்திய பராமரிப்பு விடுதி


எமது சங்கத்தினால் ஆரம்பிக்கப்படவிருக்கும் மேற்படி விடுதியில் தங்க விரும்பும் நோயாளர்கள் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

புற்று நோயில்லாத நீண்டகால நோயாளர்களும் பராமரிப்புக்காக அனுமதிக்கப்படுவர்.

வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம்,
228, பிரதான வீதி யாழ்ப்பாணம்.

21-5-93. (ஏ-3155)

---




1. ஐந்து வெற்றுப்போத்தல்கள் [ஜாம் அல்லது நெல்லிரசம்] கொடுத்து ரூபா 25/- பெறுவதுடன் அதிர்ஷ்ட சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

2. மாத முடிவில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

1-ம் பரிசு — சுவர்க்கடிகாரம்
2-ம் பரிசு — எவர்சில்வர் வீட்டுப்பாவனைப் பொருட்கள்
3-ம் பரிசு — மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்
மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

பின்வரும் இடங்களில் அதிர்ஷ்ட சீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும்:

1. ரேஸ்ட்லைன் இன்டஸ்றீஸ் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
2. அறிவகம் சாவகச்சேரி,
3. சுபாஸ் பேக் ஹவுஸ் நெல்லியடி.
4. சுந்தரம் அன் சன்ஸ் சுன்னாகம்
5. சித்திவிநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு, சுன்னாகம்
6. சவாறிஸ் சுண்டுக்குளி,
7. நீதினி 'Q' கந்தரோடை றோட், சுன்னாகம்
8. இ. இராசதுரை பத்திரிகை விற்பனைநிலையம் இணுவிலச் சந்தி

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ3084)

# புலிகளை கட்டுப்படுத்துவதில்

## 'ஜெ'யின் உறுதி தளர்ந்துவிட்டது

### அமைச்சர் சவான் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் பல்வேறு சிறைகளிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பியோடியது குறித்து மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கவலை வெளியிட்டுள்ளார்.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளரிடம் அவர் இதுபற்றித் தெரிவிக்கையில், தப்பியோடிய கைதிகளில் சிலர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் சாட்சிகள் என்று குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு மத்திய அரசு அறிவுறுத்தி இருக்கிறது என்றாலும் இப்போதெல்லாம் அவர் அதில் உறுதியற்ற நிலை கொண்டிருப்பதைப் போல் தோன்றுகிறது.

முதலமைச்சரே விடுதலைப் புலிகளின் குறியாக இருக்கின்றபோது இத்தகைய சம்பவங்கள் நடந்திருப்பது வியப்புக்குரியதாக உள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் பாதுகாப்புக்காக மட்டுமன்றி மாநிலத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் மத்திய அரசு அதிகபட்ச உதவிகளை தமிழகத்துக்கு வழங்கி வருகின்றதென கூறினர். (இ)

# புலிகள் விவகாரத்தில் தொய்வு எதுவும் ஏற்படவில்லை — ஜெயலலிதா

(சென்னை)

விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்ட தமிழக அரசின் நடவடிக்கைகளில் தொய்வு ஏதும் இல்லையென முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுவது தவறு என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் பிரதமர் பி. வி. நரசிம்மராவை புதுடில்லிக்கு வழியனுப்பிய பின் பத்திரிகையாளர்களிடம் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், அண்மையில் தீவிரவாதிகள் தப்பிய சம்பவம் தொடர்பாக எனக்கு சில ஐயங்கள் உள்ளன. ஆனால் அது குறித்து நான் இப்போது எதுவும் கூறவிரும்பவில்லை.

மாமண்டூரில் அண்மையில் மூன்று இலங்கை தீவிரவாதிகள் தப்பிய சம்பவம் குறித்து விசாரிக்க தமிழக அரசு அமைத்துள்ள குழுவுக்கு நீதிபதி அருணாசலம் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்றார். (இ)

# புலிகள் நடமாட்டம் 6 மாதமாகவே இருக்கிறது - வாழப்பாடி

(சென்னை)

தமிழ்நாட்டில் கடந்த ஆறு மாதங்களாகவே விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருந்து வருவதாக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர்களிடம் பேசிய திரு. ராமமூர்த்தி இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது, சேலம் வேலூர் ஆகிய இடங்களிலிருந்து விடுதலைப் புலிகள் தப்பிஓடியதையடுத்தும் தற்போது மாமண்டூர், சைதாப்பேட்டை ஆகிய இடங்களிலிருந்து அவர்கள் தப்பிச் சென்றுள்ளதும் இதை உறுதிப்படுத்துகின்றது. (இ)

## முத்திரைக்கு தட்டுப்பாடு

(மானிப்பாய்)

குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் முத்திரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

சில தபாலகங்களில் ஒரு ரூபா பெறுமதியான முத்திரைகள் மட்டுமே யுள்ளன. (71)

# தப்பிச் சென்ற — நவாஸ் எமது பாதுகாப்பில் இருக்கவில்லை - சிறப்பு புலனாய்வு குழு

(சென்னை)

சென்னை சைதாப்பேட்டை அகதிகள் முகாமிலிருந்து தப்பிச் சென்ற ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஒரு சாட்சியான நவாஸ் என்றழைக்கப்படும் சாலிஸ் என்பவர் தங்கள் பாதுகாப்பில் இருந்ததாகக் கூறப்படுவதை சிறப்பு புலனாய்வுக் குழு மறுத்திருக்கிறது.

மேலும் தப்பிச் சென்றவர் பற்றிய தகவல் தெரிவிப்போருக்கு சன்மானம் வழங்குவதாக தாம் இதுவரை அறிவிக்கவில்லையென்றும் புலனாய்வுக் குழு தெரிவித்திருக்கிறது.

கேற்படி குழு வெளியிட்ட ஓர் அறிக்கையில் பத்திரிகைகளில் இதுபற்றி வெளியான தகவல்கள் தவறென்றும், சைதாப்பேட்டையிலுள்ள இலங்கை அகதிகள் முகாம் தங்கள் கண்காணிப்பில் இருக்கவில்லையென்றும் இலங்கை அகதிகளுக்காக தமிழகத்திலுள்ள வேறு பல முகாம்களை போலவே இந்த முகாமும் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு தாசில்தாரரின் பொறுப்பில் உள்ளதே என்றும் விளக்கம் அளித்துள்ளது. (இ)

## விஞ்ஞான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் க.பொ.த. சாதாரண/உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞானக் கண்காட்சியொன்று நாளை 24-05-1993 தொடக்கம் 28-05-1993 திகதிவரை நடாத்தப்படவிருக்கின்றது. வருகை தரவிரும்பும் மாணவர்களின் நாளையும் நேரத்தையும் பாடசாலை அதிபர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

எல்லாக்காட்சிப் பொருட்களையும் பார்பதற்கு பல மணி நேரம் தேவைப்படுமெனவும் எனவே மாணவர்கள் அதற்குரிய ஆயத்தங்களுடன் வரும்படியும் கண்காட்சிப் பொறுப்பாளர் அறிவிக்கின்றார்.

# சாள்ஸ் நவாசை பிடிக்க சிறப்பு காவல் பிரிவு

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான தனி முகாம் சிறையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை தப்பிச் சென்ற ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் அரசு தரப்புச் சாட்சியான சாள்ஸ் நவாஸ்சைப் பிடிப்பதற்குச் சிறப்புக் காவல் துறைப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழ்நாடு சிறப்புக் காவல்துறையைச் சேர்ந்த தலைமைக் காவலர் உட்படக் காவல்துறைப் பணியாளர்கள் 6 பேர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் கூறுகின்றன. (சு-சி)

# வீடியோ, வானொலி நடிகர்கள் தேவை

வீடியோ, படங்களிற்கும் வானொலி நாடகங்களிற்கும் குரல் கொடுக்க வல்லவர்கள் விண்ணப்பிக்கவும். குரல் கொடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**30-05-1993** க்கு முன் விண்ணப்பிக்கவும்.

C. 139, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி-139)


# மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை வலிகாமம், தீவகம், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையத்தில் நடைபெறும்.

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 11 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை வடஇந்து மகளிர் கல்லூரியிலும், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாலை 3 மணி முதல் 4 மணி வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெறும். (சு-சி)

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



★

தோற்றம்:
10-01-1959

மறைவு:
17-05-1991

திதி:
23-05-1993

★

அமரர்

## சின்னத்துரை சிவலோகநாதன்

(குஞ்சு)

(கணக்கு இலிகிதர், சாமுவேல் அன் சன்ஸ் கொம்பனி லிமிட்டெட் - கிளிநொச்சி)

எங்கள் வாழ்வின் அணையாத தீபமாய்
ஒளி வீசிய எம் அன்புத் தெய்வமே
அன்பின் பண்பின் பாசத்தின் உறைவிடமே
உன்னை நினைத்து அழுதழுது மனம் ஆறவில்லை.
ஆறுதலும் தீரவில்லை
அல்லலுற்று உயிர் பிரியும் வேளையில்
யாரை நினைத்தாயோ - உன் இறப்பின்
முடிவை எதிர்பார்த்திருக்கின்றோம்.
ஈராண்டல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் உருவம் எம்மனதில் நீங்காது நிலைத்திருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தாய், சகோதரர், உறவினர்கள்.

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(சி 138)

# 31-ம் நாள் நினைவலைகள்



செல்வன்

## றெசான்ராஜ் [ரோன்]

மலர்வு:
1987-09-17

உதிர்வு:
1993-04-24

மூவிரண்டு ஆண்டுகளாய் எம் வாழ்வின்
முழுமதியாய் நீயிருந்தாய் — செல்வா
கூறுகெட்ட காலனவன் உன்
காலத்தைக் கணப்பொழுதில் முடித்துவிட
தம்பியைத் தேடியிங்கே அண்ணா
தவிப்பதுடன் திசையெங்கும் தேடிநிற்க
பாசமுடன் பாலூட்டிச் சோறு தந்த அம்மா
ரோன் போன வழி நோக்கி நிற்க
அம்மாவின் சந்ததியோ ரெசானைத்தை
நினைத்திங்கே என்றும் கலங்கி நிற்க — இன்றுடன்
முப்பொத்தொரு நாட்கள் எமைவிட்டு
முன்னவனும் இறைவனடி சேர்ந்திட்ட
என்தம்பி என்பிள்ளையின் அந்தியேட்டிக்
கிரியைகளில் கலந்துகொள்ள வேண்டுமென
கண்ணீர்த்திவலையுடன் அனைவரையும்
அழைக்கின்றோம்.

செல்வமைந்தனின் பிரிவால் துயருறும்
அம்மா வனஜாவும், அண்ணா கபிலனும்.

மானிப்பாய்,
24-05-1993.

(சி-140)

# 17,800 இல. தமிழ் அகதிகளை

## சுவிஸ் ஜூலையில் திருப்பி அனுப்பும்

(பேர்ண்)

சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் 17,800 பேர் ஜூலை மாதம் இலங்கைக்கு திருப்பி அனுப்படவுள்ளனர்.

1992 செப்டெம்பர் மாதத்திற்கு பின் சுவிஸிற்கு சென்றவர்களே முதலில் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் புதிய அகதிகளாக கருதப்படும் 800 தமிழர் அடுத்த மாதம் மட்டுமே அங்கு தங்கியிருக்க அனுமதிக்கப்படுவர். இவர்கள் மீதான விசாரணை ஜூனில் முடிவடைந்து ஜூலையில் திருப்பி அனுப்பப்படுவர்

தனது பெயரை வெளியிட விரும்பாத சுவிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில்: திருப்பி அனுப்பும் முடிவில் எந்தவித மாற்றமும் இருக்காது அதன் மூலம் இலங்கையிலிருந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சுவிஸிற்கு அகதிகள் வருவதை கட்டுப்படுத்த முடியும் என்றார்.

தற்போது சுவிஸில் அங்கீகரிக்கப்படாத அகதிகள் அங்கு தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். திருப்பி அனுப்பப்படும். அகதிகள் உடனடியாக வடக்கு-கிழக்கிற்கு அனுப்பப்படமாட்டார்கள்.

இதற்கிடையில் சுவிஸிலுள்ள அலங்கைத் தமிழர்களிடம் கடவுச்சீட்டை சமர்ப்பிக்குமாறு பொலிசார் கேட்டுள்ளனர். இதனால் தமிழ் அகதிகள் மத்தியில் பல சந்தேகங்கள் எழுந்துள்ளனவாம். (சி)

# பிரேமச்சந்திரா

## அரசு மீது கண்டனம்

(கொழும்பு)

தென்மாகாணம், வடமேல் மாகாணங்களில் ஐ.தே.கட்சி முதலமைச்சர்களை நியமித்திருப்பது சட்டத்துக்கு விரோதமான தாகுமென்று ஜனநாயக ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஜி. எம். பிரேமச்சந்திர தெரிவித்தார்.

திரு. ஜி. எம். பிரேமச்சந்திர எதிர்க்கட்சிகளின் சார்பில் வடமேல் மாகாண முதலமைச்சராக நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரச்னை அரசுக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையில் தொடர்ந்தும் பெரும்பிரச்னையாகவே இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

# தமிழ் அகதிகளுக்கு

## இத்தாலி அரசு உதவி

(ரோம்)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள அகதிகளுக்கு உதவுவதற்கு இத்தாலிய அரசு முன்வந்துள்ளது.

முதற்கட்டமாக 800 மெ. தொன் அரிசியை இத்தாலிய அரசு சிறிலங்கா அரசுக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஏற்கனவே இவ்வாறு பல நாடுகள் வழங்கிய உதவிகள் இப்பகுதிக்கு கிடைக்காமல் போனதும் தெரிந்ததே. (சி)

# 910 அடையாள அட்டை

## யாழ்ப்பாணம் வருகிறது

(யாழ்ப்பாணம்)

'கோமாரி' கப்பலில் தொளாயிரத்துப்பத்து (910) தேசிய அடையாள அட்டைகள் எடுத்துவரப்படுகின்றன. இவற்றுள் சாதாரண விண்ணப்பபடிவங்களுக்கான 633 அட்டைகளும் பாடசாலைகளுக்குரிய 106 அட்டைகளும் அவசர விண்ணப்பங்களுக்கான 126 அட்டைகளும், 1972/73 ஆண்டுகளில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கான புதுப்பித்த 45 அட்டைகளும் அடங்குகின்றன.

இவ்அடையாள அட்டைகள் உதவி அரசாங்க அதிபர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், மூலமாகவும் பாடசாலை அதிபர்களூடாகவும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படவுள்ளதால் இவ்வடையாள அட்டைகளை நேரில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு எவரும் வருகைதரவேண்டாமென்று தெரிவிக்கப்படுகிறது. 16-சி)

ஹேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றது.

வழமையான வழிகள் மூலமே திருமதி ஹேமா எம். பிரேமதாசா முடியுமென ஜனாதிபதி விஜயதுங்க கூறியதும் தெரிந்ததே. (சி

# ஜெயலலிதா சுற்றுப்பயணம்

## நேற்று திடீர் ரத்தானது

(சென்னை

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா உதகமண்டலத்திற்கும், கொடைக்கானலுக்கும் நேற்று மேற்கொள்ளவிருந்த பத்துநாள் சுற்றுப்பயணம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது

இப்பயணம் ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும் பாதுகாப்பு காரணங்களுக்காகவே அவர் தனது பயணத்தை ரத்துச் செய்திருக்கலாம் என்றும் தெரியவருகிறது. சி,

வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய பீரங்கிப்படகுகள் கப்பலில் இருந்து கரைக்கும் அடிக்கடி போய் வந்ததை காணக்கூடியதாயிருந்தது.

நேற்று இரவு தாளையடி கடற்பரப்பில் கரைக்கு மிக அண்மையாக பெரும்இரைச்சலுடன் இருபீரங்கிப் படகுகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தன. இரவு நேரம் கடற்படை பீரங்கிகள் கரையைநோக்கி பீரங்கி வேட்டுகளைத் தீர்த்தன (163 சி)

# மர்ம நோயினால்

## 17 பேர் மரணம்

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தின் ஆக்ரா நகரில், இன்னதென்று தெரியாத மர்மமான நோய் ஒன்றினால் நேற்று முன்தினம் 17 பேர் இறந்துள்ளனர்.

100 பேருக்கு மேல் இந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் 20 பேரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது நோயை இனம் காண்பதில் வைத்தியர்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். சு சி)

# பாகிஸ்தானை நோக்கி

## இந்திய ஏவுகணை

(புதுடில்லி

இந்தியத் தயாரிப்பான தரையில் இருந்து தரைக்குத் தாவும், சுமார் 250 கிலோ தூரம் செல்லக்கூடிய 'பிரிதிவி' ஏவுகணை இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை பாகிஸ்தானின் எல்லை மாநிலமான இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் முக்கிய நகரங்கள் இந்தியாவிலிருந்து சுமார் 250கிலோ மீற்றர் தொலைவிலேயே இருப்பதால் இந்தியா, பாகிஸ்தானின் எந்த இலக்கையும் 'பிரிதிவி' ஏவுகணையால் தாக்க முடியும் என்று கூறப்படுகின்றது. சு-சி)

வடுதலைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பங்கு மகத்தானது.

தேசிய உணர்வைத் தட்டியெழுப்பி தேசியப் போராட்டத்திற்கு ஊக்க சக்தியை ஊட்டுபவர்கள் கலைஞர்கள் தேசிய உருவாக்கத்திற்கு செழுமையும் முழுமையும் கொடுப்பவர்களும் அவர்களே. இந்த இலக்கில் எமது தேசத்தின் கலை இலக்கிய படைப்பாளிகளும் கணிசமான பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

போராட்ட வாழ்வை சித்தரிக்கும் கலைப்பணியில் முல்லை மாவட்டக் கலைஞர்கள் முன்னுதாரணமாக நிற்கிறார்கள். முன்னரும்மாவீரர் நாளையொட்டி தமிழோசை என்ற கலைப் படைப்பை உருவாக்கிப் பலரின் பாராட்டுதலைப் பெற்றிருந்தனர். இன்று ''இது எங்கள் தேசம்'' என்ற அலை பூமியில் வரலாற்றைப் பின்னணியாகக்கொண்டு இந்தக் கலைப்படைப்பை உருவாக்கியுள்ளனர். இயல்பாகவே கலைஞர்களுடன் மிக நெருக்கமான உறவை வழிவழியாகக் கொண்டிருக்கும் முல்லை மண்ணிலிருந்து வெளிவரும் இந்தப் படைப்பையிட்டு நாம் பெருமிதம் அடைகிறோம். அனைத்து கலைஞர்களையும் பாராட்டுகின்றோம் மேலும் மேலும் இவர்களது கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறோம் காலத்தின் குரலாக ஒடுக்கு முறைக்கு எதிரான எதிர்ப்புணர்வை எதார்த்தமாகச் சித்தரிக்கும் இந்தக்கலையாக்கம் எமது மக்களின் இதயங்களைப் பற்றிக் கொள்ளும் என்பது திண்ணம். -159-சி

வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபை அபிவிருத்திக்கென்று பணம் கிடைத்தால் கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும். மாகாணசபைக்குக் கீழ் தற்போது இல்லாத பொலிஸ் திணைக்களத்தை மாகாண சபைக்குக் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிகள் செய்யப்போவதாகவும் சந்திரிகா குமாரணதுங்கா மேலும் தெரிவித்தார். (சு-சி)

தமிழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துவிட்டதாகவும் தமிழக அரசை கலைக்குமாறும் பல கோரிக்கைகள் தினமும் மத்திய அரசுக்கு விடுக்கப்பட்டுவருகிறதாம்.

இதேவேளை மத்திய அரசும் இதற்கான நல்லதொரு தருணத்தை எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் தமிழக அரசு கலைக்கப்படலாம்என்ற பெரும் அச்சம் செல்வி ஜெயலலிதாவிடம் காணப்படுவதாகவும் அச்செய்திகள் கூறின. (சி)

# தேர்தல் அவதானிகள் குழு

## அறிக்கை சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களை அவதானித்த சர்வதேச அவதானிகள் குழுவினர் தமது அறிக்கையை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வாவிடம் நேற்று கொழும்பில் கையளித்தனர்

பத்து நாடுகளைச் சேர்ந்த இருபத்தைந்து அங்கத்தவர்களைக்கொண்ட சர்வதேச அவதானிகள் குழுவுக்கு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த டக்ளஸ் மைக்மிலன் தலைமை தாங்கினார்.

இலங்கை மாகாணசபைத் தேர்தல்கள் சுதந்திரமான முறையிலும் உறுதியாகவும் நடைபெற்றன என்று அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத்முதலி ஆகியோரின் படுகொலைகள் மிகவும் பதற்றமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் உணர்ச்சிநிலை தணிக்கப்பட்டு தேர்தல்கள் சகஜ சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் அவர்கள்தெரிவித்துள்ளனர். (இ-சி)

இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. ஜே. பி. 4 இடங்களைப் பெற்றது. காங்கிரஸிற்கு 2 இடங்களே கிடைத்தது ஆந்திராவில் 2இடங்களில் இரண்டையும் தெலுங்கு தேசமே கைப்பற்றியது. இங்கு காங்கிரஸிற்கு பெரும் தோல்வி.

எனினும் பஞ்சாபிலும், கர்நாடகத்திலும் நடைபெற்ற தேர்தலில் இரண்டிலும் காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. (சி)

இது எங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறை பொறுப்பாளர் தமிழ் செல்வனால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் முல்லை.மாவட்ட கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் சங்கன் தலைமையில் நடைபெற்ற இவ் வெளியீட்டுவிழாவில் முதல் பிரதியை தமிழ்ச் செல்வனிடமிருந்து நிதர்சனம் பொறுப்பாளர் திரு.ஜவான் பெற்றுக் கொண்டார்

இவ்விழாவை யாழ்.மாவட்டத் தளபதி அன்பு, மகளிர் படையணி தளபதி செல்வி விதுஷா ஆகியோர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைவர் பிரபாகரன் விடுத்த வாழ்த்துச் செய்தியை வாசித்தார் தலைவரினால் வழங்கப்பட்ட சிறப்புப் பரிசை அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் மூலம். கலைஞர்கள் சார்பாக முல்லை. கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர்திரு சங்கரிடம் கையளித்தார் ஒளிப்படநாடா தொடரியான மதிப்புரைகளை பேராசிரியர் சிவத்தம்பி திருமதி கோகிலா மகேந்திரன், திரு சோ.பத்மநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். (159-ரி)

தெரிவுக்குழு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை பற்றி இவர்கள் கலந்துரையாடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்னை தீர்வுக்கு தெரிவுக்குழுவின் சிபார்சை அரசு ஆதரிக்குமென ஜனாதிபதி விஜயதுங்க ஏற்கனவே கூறியுள்ளதும் தெரிந்ததே. இதேவேளை தெரிவுக்குழுவின் செயற்பாடு குறித்து பலரும் சந்தேகம் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# இணுவிலில்

## ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில் இரதோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது இதனையொட்டி நாவேய ஈழநாட்டின் சிறப்புமலர் வெளிவருகிறது. (சி)

புலிகள் தமது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகள் அனுப்புவதும் தொலைபேசிமூலம் தகவல் அனுப்புவதும் இதற்கான வழியல்ல.

நாட்டிலிருந்து தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம் இந்நாட்டில் தீவிரவாதத்திற்கு இடமில்லை. தனிநபர்களை கொல்வதன்மூலம் அரசாங்கங்களை மாற்றிவிடவோ அதிகாரத்திற்கு வரவோ முடியாது. எந்த கட்டத்திலும் பிரிவினையை நாம் அனுமதிக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை இந்தியாவின் பிரபல பத்திரிகையான 'இந்து' தெரிவிக்கையில்; ஜனாதிபதி விஜயதுங்கவுடன் எதிர்கட்சிகள் ஒத்துழைத்தால் அடுத்துவரும் 18 மாத காலங்களில் இலங்கையில் முக்கிய மாற்றங்களும், திருப்பமான நிகழ்வுகளும் இடம்பெறுமென கூறியுள்ளது. (சி)

முதலமைச்சர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கம் இல்லாமல் செய்ய எண்ணம் கொண்டுள்ளது. பல தொழிற்சாலைகள் வணிக நிறுவனங்கள் அலுவலகங்கள் கொண்ட பெரும் பகுதியில் எதிர்கட்சிகள் வெற்றியீட்டியுள்ளன. கூடுதலான மக்கள் வாழும் 'கிரிந்த'வில் இருந்து உலுக்குளம் வரை எதிர்க்கட்சிகள் மாகாணசபையில் வெற்றியீட்டியுள்ளது. மேல்மாகாணசபை எதிர்க்கட்சிகள் கைப்பற்றியதால் தான் ஐக்கியதேசியக்கட்சி தென்மாகாணம், வடமேல் மாகாணத்தில் தங்களது முதலமைச்சர்களை நியமித்துள்ளது என்றார். (கு-சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number B/10836/B.